பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 29 புதன்கிழமை 15.12.2021 கதிர் 40

இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அடுத்த வருடத்துக்கான வரவு–செலவுத்திட்டத்தை மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இன்று சமர்ப்பிக்கின்றார். மேயர் பதவியில் அவரின் அதிகாரம் நீடிப்பதற்கான தலையெழுத்து இன்று பக்கம்02

# ஆளுந்தரப்பு எம்.பிக்களுடன் பஸில் அவசர சந்திப்பு!

கொழும்பு, டிசெ 15

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தலைமையில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் முக்கிய கூட்டம் நேற்று முற்பகல் நடைபெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கான வழிமுறைகள், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா என்பன உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன.

அதேவேளை, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றிரவு அமெரிக்கா நோக்கிப் புறப்படவிருந்தார். இந்நிலையில், ஆளுங்கட்சி எம்.பிக்களுடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளமை முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.



## யாழ்.மாநகர பட்ஜட் இன்று சபைக்கு

# தப்புமா மணியின் தலை?

## எதிர்த்து வாக்களிக்க கூட்டமைப்பு முடிவு




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை இன்று மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சபையில் முன்வைக்கவுள்ளார். ☞2

## யாழ். மாநகர சபை 'பட்ஜட்'டை தோற்கடிக்க இடமளியாதீர்கள்!


### சமூக விஞ்ஞான ஆய்வு மையம் வேண்டுகோள்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் பெருந்தேசியவாதத்தினுடைய நிகழ்ச்சி நிரல் இங்கே மேடையேறுவதற்கான வாய்ப்புக்கள் ☞09

## ஆஸ்திரேலியாத் தூதர் போதனாவுக்கு விஜயம்



இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஆஸ்திரேலியாத் தூதுவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு ☞09

## ஜனாதிபதியின் முடிவில் உள்நோக்கம் கிடையாது

### பீரிஸ் கூறுகின்றார்



நாடாளுமன்ற அமர்வை ஜனாதிபதி இடைநிறுத்துவதென்பது சாதாரண நடவடிக்கை. அதில் வேறு நோக்கம் எதுவும் கிடையாது. அரசமைப்பிலுள்ள ☞09

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் நடந்தது என்ன?

### சுமந்திரன் எம்.பி. விளக்கம்



(இ.கலையமுதன்)

ஆளுநர் தலைமையில் நடைபெற்ற வடக்கு மாகாண அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலில் ☞2

## லிட்ரோ நிறுவனத்துக்கு காலக்கெடு

எரிவாயு சிலிண்டர் அடங்கிய கலவைகள் மற்றும் சிலிண்டர்களை விநியோகிப்பதற்குள்ளவாய்ப்பு தொடர்பில் அறிவிப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் லிட்ரோ ☞2

தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

**காலம்** - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானிக்கப்படுகின்றது.

இன்று தடங்கல் வந்தாலும், அதைச் சரி செய்து, சமாளிப்பதற்கு இன்னொரு சந்தர்ப்பம் இரண்டு வாரத்தில் வரும் என்பதால், இன்றைய விவகாரத்தை சாவகாசமாக அவர் கையாளமுடியும்.

எது, எப்படி என்றாலும், நேற்றிரவு நிலைவரப்படி, தராசுத் தட்டில் மேயர் மணிவண்ணனின் காலை வார முயலும் தரப்பின் தட்டுத்தான் தாழ்ந்து நின்றது. அதாவது அத்தரப்பின் கைதான் ஓங்கியிருந்தது.

தன்னுடைய வரவு – செலவுத்திட்டத்தை நிறைவேற்றச் செய்து பதவியைத் தக்க வைப்பதற்காக ஏறாத படி எல்லாம் ஏறி, தட்டாத கதவெல்லாம் தட்டி விட்டார் மணி.

தமிழரசுத் தலைவர் மாவையைப் போய்ச் சந்தித்தார். சுமந்திரனுடன் தனியாகப் பேசினார். விக்னேஸ்வரன் ஆதரவு தெரிவித்து பகிரங்க அறிக்கையையே வெளியிட்டு விட்டார்.

நேற்றுத் தமது மாகாநகர சபை உறுப்பினர்களுடன் மெய்நிகர் முறையில் உரையாடிய ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தமக்கு மேயர் மணிவண்ணன் நான்கு, ஐந்து தடவைகள் தொலைபேசி அழைப்பு எடுத்து விட்டார் என்றும், தாம் இன்னும் பதிலளிக்கவில்லை என்றும், அப்போது கூறியிருக்கின்றார்.

45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 16 பேர். நேற்றுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் கூடி, மேயர் மணிவண்ணனின் வரவு – செலவுத்திட்டத்தைத் தோற்கடிப்பது எனத் தீர்மானித்துவிட்டனர்.

எனினும் இந்த 16 பேரில் ஒருவருக்கு நேற்று சுகவீனம். ஆயினும் இன்று வாக்களிப்புச் சமயம் அவர் சபைக்கு நிச்சயம் பிரசன்னம் தருவார் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 13 உறுப்பினர்களில் பத்துப் பேர் மணிவண்ணன் தலைமையிலான அதிருப்திக் குழுவில். மற்றைய மூவரும் நிச்சயம் மணிவண்ணனுக்கு எதிராக வாக்களிப்பர் என்பது உறுதி.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத்தின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த தலா ஒவ்வொரு உறுப்பினர்கள் என மூவர் ஐக்கிய தேசிய முன்னணிக் கூட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களும் மேயர் மணிவண்ணனின் காலை வாரும் எண்ணத்தில் உள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் திருமதி விஜயகாந்த் உள்ளார். அவரும் பெரும்பாலும் மேயர் மணிவண்ணனுக்கு மாறாக வாக்களிப்பது உறுதி எனத் தெரிகின்றது. ஆனால் அவர் குழந்தைப் பிரசவத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார். இது பேறு காலம். இன்று வரவு – செலவுத்திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளும் உறுதியில் அவர் நேற்றிரவு வரை இருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் மணிக்கு எதிராக வாக்களிக்கக் கூடிய நிலைமை உண்டு. மற்றவர் ஏற்கனவே ஈ.பி.டி.பியினர் பத்துப் பேருடன் பதினோராவது ஆளாக சேர்ந்து கொண்டுள்ளார்.

ஆக, ஈ.பி.டி.பியினர் பத்துப் பேர் மற்றும் மணிவண்ணன் குழுவின் பத்துப் பேர், சு.க.உறுப்பினர் ஒருவர் என மணி பக்கத்துக்கு 21 உறுப்பினர்களும் மணியின் காலைவாருவதற்கு 24 உறுப்பினர்களும் அணி சேர்ந்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

ஈ.பி.டி.பினர் பத்துப் பேரின் ஆதரவு கூட மணிவண்ணனுக்கு முழு அளவில் இன்று கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

கடந்த தடவை தங்கள் ஆதரவில் மேயர் பதவியைப் பிடித்த மணிவண்ணன், தங்களுடன் கலந்தாலோசித்து விடயங்களை முன்நகர்த்துவதில்லை என்ற ஆதங்கம் – எரிச்சல் – கோபம் – ஈ.பி.டி.பியினருக்கும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் உண்டு. ஆனாலும் அதற்காக அவரைப் பதவி வீழ்த்த வைக்கும் எண்ணம் ஈ.பி.டி.பி. தலைமைக்கு இல்லை. நிபந்தனையின் அடிப்படையில் – 'டீல்' போட்டு – அவரைப் பதவியில் நீடிக்க அனுமதிக்கலாம் என்ற கருத்தே ஈ.பி.டி.பி. பக்கத்தில் மேலோங்கியுள்ளது.

ஆனாலும், அதை – அத்தகைய டீலை – இன்று வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்புக்கு முன்னர் எட்ட முடியாது என்பதால் ஈ.பி.டி.பி. புதுவிதத் தந்திரோபாயத்தைக் கையாளலாம் என எதிர்பார்க்கின்றது.

மேயர் மணிவண்ணனின் காலை வாரும் தீர்மானத்தை கூட்டமைப்பு எடுத்துள்ளதால் அந்தப் பக்கம் பயணிக்க முடியாது, கூட்டமைப்புக்கு எதிராகத்தான் செயற்பட வேண்டும் என்ற கட்டாயம் ஈ.பி.டி.பிக்கு.

அதற்காக, 'டீல்' ஒன்றுக்கு உடன்பட்டு வராமல் மேயர் மணிவண்ணனின் பதவியை உறுதிப்படுத்தவும் ஈ.பி.டி.பி. விரும்பவில்லை.

இரண்டுக்கும் நடுவில் அது ஒரு முடிவை எடுக்கும். மேயர் மணிவண்ணன் மீது கோபமாக – காட்டாக – இருக்கும் தனது மாநாகர சபை உறுப்பினர்கள் ஓரிருவரை சபைக்கு இன்று போகாமல் மறிப்பதன் மூலம், மணிவண்ணனின் பட்ஜெட் இன்று தோற்பதை உறுதிப்படுத்துவது, மீண்டும் இரண்டு வாரத்தில் அது மீள் வாக்கெடுப்புக்கு வரும் போது அதை ஆதரிப்பற்கான நிபந்தனைகளை விதித்து, டீலைப் பூர்த்தி செய்வது.

இன்றைய வாக்கெடுப்பில மணி தரப்பு கவிழ்ந்து கொட்டுண்டால்தான், அடுத்த வாக்கெடுப்புக்கு முன்னர் மணி தரப்புடன் 'டீல்' பேசுவது சுலபமாக இருக்கும் என ஈ.பி.டி.பி. தரப்பு கருத்துவதாகத் தெரிகின்றது.

எது, எப்படி என்றாலும் இன்று மணிவண்ணன் தரப்புக்கு நாள் நல்லதில்லைத்தான்.

ஆனாலும், கூட்டமைப்பு உறுப்பினரின் சுகவீனம், கூட்டணி உறுப்பினர் திருமதி விஜயகாந்தின் பேறு நாள் போன்றவை மணிக்கு சார்பாகி அவரின் பதவியை இன்றே உறுதிப்படுத்தும் அதிசயம் நடக்காது என்று ஒதுக்கி விடமுடியாது.

★ ★ ★

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற – தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துப்படுத்துகின்ற – கட்சிகளின் கூட்டத்தை ஒட்டிய தகவல்களை இன்று தருவதாகக் குறிப்பிட்டிருந்தேன். இன்னும் ஒரு நாள் 'எக்ஸ்கியூஸ்' தரும்படி விநயமாக வேண்டுகிறேன். வாசர்கள் பொறுத்துத் கொள்வார்கள். நாளை அவற்றைப் பார்ப்போம் நண்பர்களே..!

– மின்னல் –

## லிட்ரோ நிறுவனத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எரிவாயு நிறுவனத்துக்கு இன்று வரை காலக்கெடு வழங்கியுள்ளது.

லிட்ரோ மற்றும் லாஃப் எரிவாயு நிறுவனங்களினால் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீள பெற்றுகொள்ள உத்தரவிடுமாறு கோரி சிவில் அமைப்பு செயற்பாட்டாளரான நாகந்த கொடிதுவாக்குவால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றத்தால் இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ரிட் மனு நீதிபதிகளான ருவன் பெர்னாண்டோ மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோரால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எரிவாயு சிலிண்டரில் உள்ளடக்க வேண்டிய வாயுவின் அளவு மற்றும் அந்தச் சிலிண்டர்களை விநியோகிப்பதற்குள்ள வாய்ப்பு மற்றும் தற்போது சந்தைகளிலுள்ள சிலிண்டர்களை மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியம் தொடர்பிலும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசூரிய, இது தொடர்பில் தமது தரப்பினரிடம் விசாரித்து தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு இன்று புதன்கிழமை நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

அதற்கமைய இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆளுநர் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறிதரன் எம்.பி. வெளியேறிய பின்பு நானும் சித்தார்த்தனும் தமிழ்மொழியில் கலந்துரையாடப்படாவிட்டால் நாங்களும் வெளியேறிவிடுவோம் எனத் தெரிவித்ததன் பின்னர் அதிகமாக தமிழ்மொழியிலேயே கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

– இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்துக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழிலே கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை சிறிதரன் முன்வைத்தார். அதனை ஏற்றுக் கொண்டு தமிழிலும் ஆங்கிலத்திலுமாக கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. சிறிதரன் வெளியேறிய பின்பு நானும் சித்தார்த்தனும் தமிழ்மொழியில் கலந்துரையாடப்படாவிட்டால் நாங்களும் வெளியேறிவிடுவோம் எனத் தெரிவித்ததன் பின்னர் அதிகமாக தமிழ்மொழியிலேயே கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. தேவையான மொழிபெயர்ப்புகள் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டன.

விசேடமாக காணி விடுவிப்பு சம்பந்தமாக கலந்துரையாடி இருந்தோம். ஏற்கனவே ஏற்றுக்கொண்ட காணி விடுவிப்புகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தோம். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.

புதிதாக படையினருக்கான காணி சுவீகரிப்பு தொடர்பாக கேள்வி எழுப்பிய போது அது தொடர்பான ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாக ஆளுநர் தெரிவித்தார். அதனை நாங்கள் பார்க்க வேண்டும் எனக் கேட்டிருக்கின்றோம். அதனை ஆளுநர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார். மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் அதிலுள்ள நியாயத்தன்மையை நாங்கள் பார்க்க வேண்டும் எனக் கேட்டோம்.

காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தால் போராடி அதனை நாங்கள் தடுப்போம். சட்டத்தை மீறியேனும் வீதிக்கு இறங்கிப் போராடுவோம். அது சம்பந்தமான தெளிவுபடுத்தல் கூட்டங்களை நடத்துவதாக ஆளுநர் தெரிவித்தார். விடுக்கப்பட வேண்டிய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொட்டடியில் உள்ள சமையல் எரிவாயு களஞ்சியசாலை தொடர்பில் நான் கேள்வி எழுப்பியபோது அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணித்தார் – என்றார்.

## தப்புமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவு – செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்ட நிலையில் இன்று சபைக்கு வருகின்றது.

இந்த வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதே நிலைப்பாடுடன் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டாலும் இன்றைய சபை நடவடிக்கையின்போது, தமது கட்சியின் முடிவை அறிந்து கொள்ளுமாறு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

எனினும், இன்று பாதீட்டு விவாதத்தின் பின்னர்தான் ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் 45 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 16 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களில் மேயர் மணிவண்ணனுக்கு ஆதரவாக 10 உறுப்பினர்களும், எதிராக 3 உறுப்பினர்களும் உள்ளனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் 11 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 3 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் சார்பில் தலா ஓர் உறுப்பினரும் அடங்குகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களில் மூவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் என 24 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மூவரும் வெளிநடப்பு செய்யும் முடிவை எடுத்தால் பாதீடு நிறைவேற்றப்படுவதற்கும் சந்தர்ப்பம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காணி தேவை
யாழ்.நகர்ப் பகுதியில் வியாபார நோக்கத்திற்குரியதான ( Commercial Purpose Land )
3-4 பரப்பளவுடைய காணி தேவை.
தொடர்பு:- 076 928 9784






# அகில இலங்கை ரீதியான விவாதப் போட்டியில் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு முதலிடம்




இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத் தின் ஏற்பாட்டில் நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்க ளுக்கு இடையிலான தமிழ் மொழி மூலமான விவாதப் போட்டியில், வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா, கடந்த திங்கட்கிழமை கொழும்பு இலங்கை மன்ற பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற விவாதப் போட்டியில், முதலாம் இடத்தை வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் விவாத அணி பெற்றுக்கொண்டது.

இதேவேளை இரண்டாமிடத்தை மட்டக்களப்பு மண்முனைமேற்கு, வவுணதீவு பிரதேச சபை பெற்ற துடன் மூன்றாமிடத்தை புதுக்குடியிருப்பு பிரதேசசபை பெற்றுக்கொண்டது.

முதலாமிடத்தை பெற்றுக்கொண்ட மானிப்பாய் பிரதேசசபையின் விவாதக்குழுவில் தவிசாளர் அந் தோனிப்பிள்ளை ஜெபநேசன், உறுப்பினர் களான அருட்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ, கந்தையா ஜெசிதன், லோகப்பிரகாசம் ரமணன், சிவசண்முகநாதன் அனுசன் உள்ளிட்டவர்கள் பங்கு பற்றியிருந்தனர். அணியின் தலைவராக உறுப்பினர் கந்தையா ஜெசிதன் செயற்பட்டிருந்தார்.

# சிறார்களுக்கான மரண தண்டனை தொடர்பான குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம்

இலங்கையின் குற்றவியல் நடைமுறை தொடர்பான சட்டத்தின் 281 ஆவது பிரிவைத் திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதிமன்றத்தின் தத்துவப்படி குற்றமிழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு நபருக்கும் மரண தண்டனையை விதிக்கக் கூடாது.

இதற்குப் பதிலாக ஜனாதிபதி விரும்பும் வரை தடுப்புக் காவலில் வைத்திருக்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையில் 53 ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், 18 வயதுக்குக் குறைவாக இருப்பின் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாதெனக் கூறும் ஏற்பாடுகள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட வில்லை.

அதனால், நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மையை நீக்குவதற்காக குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 281 ஆவது உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் அலி சப்றி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.





| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 25.02.1992 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - அனுசம் 2<br>கி.பா - 25 செவ் - 2 இல்<br>தகைமை - BSc Agriculture தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன் | பிறந்த திகதி - 20.08.1987 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - திருவாதிரை 5<br>கி.பா - 58 செவ் / சூரி 7 இல்<br>தகைமை - BSc, MSc Eng. தொழில் - அரசசேவை<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 10.10.1991 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - விசாகம்<br>கி.பா - 11 செவ் 2 இல்<br>தகைமை - IT MSc தொழில் - Germany PR<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி Germany மணமகன் | பிறந்த திகதி - 12.07.1993 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - ரேவதி<br>கி.பா - 33 செவ் 11 இல்<br>தகைமை - BSc தொழில் - Soft ware Eng.<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி கொழும்பில் வேலை. |
| பிறந்த திகதி - 12.12.1996 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூராடம் 2<br>கி.பா - 24 செவ் 4இல்<br>தகைமை - G.C.E. A/L தொழில் - France<br>எதிர்பார்ப்பு - France & Ceylon மணமகன் | பிறந்த திகதி - 27.05.1981 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 1<br>கி.பா - 16 செவ் 2 இல்<br>தகைமை - BSc, MSc தொழில் - UK PR<br>எதிர்பார்ப்பு - படித்த மணமகள் |
| பிறந்த திகதி - 29.01.1995 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூராடம் 2<br>கி.பா - 28 செவ் 11 இல்<br>தகைமை - Bio தொழில் - UK PR<br>எதிர்பார்ப்பு - UK மணமகன் தேவை | பிறந்த திகதி - 03.07.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - விசாகம் 2<br>கி.பா - 27 செவ் 6 இல்<br>தகைமை - MBBS தொழில் -Veterinary Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor,Eng., Bank (வெளிநாடு விருப்பம்) |
| பிறந்த திகதி - 20.12.1988 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 1<br>கி.பா - 13 செவ் 11 இல்<br>தகைமை - பட்டதாரி தொழில் - UK PR<br>எதிர்பார்ப்பு - UK மணமகன் | பிறந்த திகதி - 07.01.1987 மதம் - இந்து<br>ஜாதி -K பகுதி நட்சத்திரம் - ரேவதி<br>கி.பா - 65 செவ் 8 இல்<br>தகைமை - HNDA தொழில் - அரசசேவை<br>எதிர்பார்ப்பு - படித்த அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 26.09.1989 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - புனர்பூசம் 3<br>கி.பா - 18 செவ் / சூரி 2 இல்<br>தகைமை - Chartered Accountant தொழில் - Accountant<br>எதிர்பார்ப்பு - Australia PR பட்டதாரி மணமகன் | பிறந்த திகதி - 24.08.1987 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம் 2<br>கி.பா - 66 செவ் / சூரி 1 இல்<br>தகைமை - Accountant தொழில் - Australia PR<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி Australia மணமகள் |
| பிறந்த திகதி - 02.08.1993 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - திருகோணம்<br>கி.பா - 88 செவ் 8 இல்<br>தகைமை - BSc Soft Ware Eng. தொழில் - Singapore Work<br>எதிர்பார்ப்பு - Singapore + Ceylon பட்டதாரி மணமகன் | பிறந்த திகதி - 01.01.1985 மதம் - இந்து<br>ஜாதி -K ஆண் நட்சத்திரம் - அச்சுவினி<br>கி.பா - 55 செவ் 10 இல்<br>தகைமை - G.C.E A/L தொழில் - Electrician Company<br>எதிர்பார்ப்பு - படித்த மணமகள், வேலை செய்பவர் |
| பிறந்த திகதி - 20.04.1993 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - ரேவதி<br>கி.பா - 39 செவ் 8 இல்<br>தகைமை - Cima தொழில் - Bank Accountant<br>எதிர்பார்ப்பு - கொழும்பு பட்டதாரி அரச சேவை மணமகன் | பிறந்த திகதி - 22.10.1991 மதம் - இந்து<br>ஜாதி -V சைவம் நட்சத்திரம் - உத்தரட்டாதி 4<br>கி.பா - 21 செவ் / சூரி 2 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - சைவவேளாளர் பெண் Doctor, விரிவுரையாளர் |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.


# தபால் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

## வவுனியாவிலும் நடந்தது



நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்கள், பல கோரிக்கைகளை முன்வைத்து, நேற்று (செவ்வாய்க்கிழமை) பணிபகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் வவுனியாவிலும் தபால் ஊழியர்கள், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், அனைத்து தபால் நிலையங்களும் நேற்று ஊழியர்கள் பிரசன்னமாகாதமையால் மூடப்பட்டன.

இந்நிலையில் சிறுநீரக கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவு போன்ற பல்வேறு தேவைகளின் பொருட்டு, தபால் நிலையத்துக்கு வருகை தந்த பொதுமக்கள், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றிருந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இதேவேளை கோரிக்கைகளுக்கு உடன் தீர்வு கிடைக்காவிடின், பாரிய தொழில் சங்க நடவடிக்கைக்கு தயாராவோம் என வவுனியா பிரதான தபாலகத்துக்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# தனியார் காணியில் துப்பாக்கி ரவைகள்

## கிளிநொச்சியில் மீட்கப்பட்டன

கிளிநொச்சி – கோரக்கண் கட்டுப்பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி – கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் – கட்டு பூங்காவனம் சந்திப்பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றில், குழி ஒன்றை வெட்டிய போது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து சம்பவம் அறிந்து அந்த இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர். இதேவேளை மேற்படி குழியினுள் மேலும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற கோணத்தில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கைக்குண்டு வெடித்ததில் 15 வயது சிறுவன் சாவு!

## திருகோணமலையில் துயரம்

திருகோணமலை–மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இக்பால் நகர் பகுதியில் கைக்குண்டொன்று வெடித்ததில், 15 வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தோப்பூர் – அல்லைநகர் பகுதியைச் சேர்ந்த முகம்மது ஹபீஸ் நளீம் (வயது – 15) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது –

ஆடுகளின் உணவுக்காக இலை, குழைகள் வெட்டச் சென்ற சிறுவன், புதர் ஒன்றை வெட்டிக் கொண்டிருந்தபோது அங்கிருந்த கைக்குண்டில் கத்தி பட்டு வெடித்ததில், குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளான் எனத் தெரியவருகின்றது.

மேலும் சம்பவம் தொடர்பாக மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஏமாறத் தயாராகும் புதுடில்லி

'எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி விழுந்தாராம்' – என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

அத்தகைய ஓர் அனுபவப் பாடத்தை இலங்கை விடயத்தில் படிப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி – அவரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் ஆகியோர் தயாராகின்றனர் என்றே தோன்றுகின்றது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு முண்டு கொடுத்து – முதுகு கொடுத்து – மீட்கும் உறுதிப்பாட்டை மோடி அரசு வழங்கியிருக்கின்றது என்பது பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்ட தகவலாகியுள்ளது.

அதற்காக சில வாக்குறுதிகளை இலங்கைத் தரப்பு – கோட்டாபாய ஆட்சிப் பீடம் – புதுடில்லிக்கு வழங்கியிருக்கின்றது என்றும் தெரிய வருகின்றது.

★ இலங்கையில் சீனாவின் ஆதிக்கம், காலூன்றல் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டு வருதல்.

★மாகாண சபைத் தேர்தலை நடத்துவது உட்பட 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவது. (காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட இணங்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் உள்ளடங்கலாக)

– இவை இணக்கப்பாட்டில் முக்கிய அம்சங்கள் என்று சம்பந்தப்பட்ட தரப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. எனினும் வடக்கு – கிழக்கு இணைப்புத் தொடர்பில் இலங்கை – இந்திய ஒப்பந்த வாசகம் மீளவும் செயற்பாட்டுக்கு வருமா என்பது தெரியவில்லை.

'பசி வந்திடப் பத்தும் பறந்திடும்' என்பார்கள். அது போன்ற நெருக்கடி நிலைமை இலங்கைக்கு. பொருளாதார நெருக்குவாரத்தில் இருந்து நாடு மீளா விட்டால் பசியும் பட்டினியும் நிலை கொள்வது தவிர்க்க முடியாதது என்பது யதார்த்தம்.

இந்த நெருக்கடிகளை எப்படியாவது சமாளித்தாக வேண்டும், முகம் கொடுத்தாக வேண்டும் என்ற இக்கட்டால், இந்தியாவின் உதவிகளைப் பெற்று மீளுவதற்கு, புதுடில்லி விதிக்கும் நிபந்தனைகள் அனைத்துக்கும் இணங்குவது போல பம்மாத்துக் காட்டுகின்றது இலங்கை என்பதுதான் உண்மை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட – மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் – அரசமைப்பில் சேர்க்கப்பட்டு 34ஆவது வருடத்தில் இருக்கின்றோம். நாட்டின் அரசமைப்பில் – மீயுயர் சட்டத்தில் – தெளிவாக இருந்தும் 34 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படாத இந்த அதிகாரப் பகிர்வை, அந்த அதிகாரப் பகிர்வு முறைக்கே நிரந்தரமாக ஆப்பு வைக்கும் எண்ணத்துடன் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற கோட்பாடு சகிதம் களத்தில் இறங்கியிருக்கும் கோட்டாபய அரசு நடைமுறைப்படுத்தப் போவதாக உறுதியளிப்பது வேடிக்கையிலும் வேடிக்கையாகும்.

இலங்கையின் உறுதிமொழி என்ற குதிரையில் ராஜீவ், நரசிம்மராவ், மன்மோகன் சிங், வாஜ்பாய் என்று வரிசையாகப் பல இந்தியப் பிரதமர்கள் ஏறி விழுந்து விட்டார்கள். நீண்ட காலம் காங்கிரஸ் அரசுகளின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே.நாராயணன் வரை இந்திய அதிகார வர்க்கமே கொழும்பு முன்னெடுத்த இராஜதந்திர ஏமாற்று நடவடிக்கையில் முகம் குப்புற விழுந்தமைதான் மிச்சம். அதுதான் கடந்த 34 வருட அரசியல் சரித்திரம். பட்டறிவு.

இப்போது ராஜபக்ஷக்கள் கொடுக்கும் கயிறை விழுங்கி – நம்பி – மோடி ஆட்சிப் பீடமும் இன்னொரு தடவை ஏமாறத் தயாராகின்றது என்பதுதான் யதார்த்தமாகும்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் எழுதி ஒப்பமிட்டு, அதை நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பில் சேர்ந்த பின்னரும், அதை நடைமுறைப்படுத்த மறுத்து, 34 வருடங்களாகக் காலத்தை இழுத்தடித்த – ஒரு நாட்டிடம் – பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்பிடம் – மீண்டும் ஒரு தடவை ஏமாறத் தாயாராகின்றது புதுடில்லி. அவ்வளவுதான்.

### பண்டோரா ஆவண விவகாரம்;

# பணத்தை வேறு வங்கிகளுக்கு மாற்றினார் திருக்குமார் நடேசன்

### கசிந்தது முக்கிய தகவல்



தொழிலதிபர் திருக்குமார் நடேசன் மற்றும் அவரது மனைவி நிருபமா ராஜபக்ஷ தொடர்பான பண்டோரா ஆவணங்கள் வெளியானதைத் தொடர்ந்து, வெவ்வேறு வங்கிக் கணக்குகளுக்கு அவர்கள் பணத்தை மாற்றியுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தனது மகனுடன் இந்த மாதம் சிங்கப்பூரில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் தங்கி இருந்து பணத்தை மாற்றுவதற்காக பல்வேறு வங்கிகளின் பிரதிநிதிகளுடன் திருக்குமார் நடேசன் சந்திப்புகளை நடத்தினர் என அவர் குற்றம் சாட்டினார்.

குறித்த விடுதிக்கு ஒரு நாளைக்கு 8 ஆயிரத்து 500 சுவிஸ் பிராங்குகள் தேவைப்படுகின்ற நிலையில் பார்வையாளர்கள் அனுமதியுடன் ஒரு நாளைக்கு 12 ஆயிரம் சுவிஸ் பிராங்குகள் செலவாகும் என்றும் இவர்கள் 15 நாள்கள் அங்கு தங்கி இருந்தார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு இலங்கையில் தனிநபர்களால் திருடப்பட்டதாகக் கூறப்படும் பணத்தை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவந்து பொதுச் சேவைக்குப் பயன்படுத்த வேண்டும் என வசந்த சமரசிங்க கேட்டுக்கொண்டார்.

வெளிநாடுகளில் அந்தத் தனியார் வங்கிக் கணக்குகளில் உள்ள பணத்தை நாட்டுக்கு அனுப்பக் கோரும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்றும் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பிரபல செல்வந்தர்களின் இரகசிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பண்டோரா ஆவணத்தில் வெளிக்கொணரப்பட்ட இலங்கையர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக உடனடி விசாரணையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ஒக்ரோபர் 6 ஆம் திகதி அறிவித்தார்.

இதனை அடுத்து லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக் குழுவிற்கு ஜனாதிபதி செயலகத்தின் சட்ட விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமும் சட்டத்தரணியுமான ஹரிகுப்த ரோஹணதீர கடிதம் எழுதியிருந்தார்.

அதில் ஒக்ரோபர் 6 ஆம் திகதி முதல் ஒரு மாதத்துக்குள் இந்த விடயம் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டிருந்தபோதும் அந்தக் கடிதத்தில் நிருபமா ராஜபக்ஷவினதோ அல்லது நடேசனினதோ பெயர் குறிப்பிடப் படவில்லை.

எவ்வாறாயினும், கால அவகாசம் இருந்த போதிலும், நவம்பர் 8 ஆம் திகதி இடைக் கால அறிக்கை வழங்கப்பட்ட நிலையில், விசாரணை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் செயலாளர் அப்சரா கல்தேரா தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு, தற்போதைய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொது நிதியைப் பயன்படுத்தி மல்வானையில் வில்லா ஒன்றைக் கட்டினார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக நடேசன் மீதும் முறைகேடு தொடர்பாகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இருப்பினும் இருவரும் எந்தத் தவறும் செய்யவில்லை என மறுப்புத் தெரிவித்து வருகின்ற போதும் தற்போதும் வழக்கு நீதிமன்றில் உள்ளது. பண்டோரா ஆவணத்தில் வெளிக்கொணரப்பட்ட விடயங்கள் தொடர்பாக முன் னாள் அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ டிசெம்பர் மாதம் முதலாம் திகதி லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

நடேசன் இதுவரை இரண்டுமுறை சாட்சியம் வழங்கியுள்ள நிலையில் இவர்கள் இருவரும் மீண்டும் இந்த விடயம் தொடர்பாக விசாரணைக்கு அழைக்கப்படமாட்டார்கள் என லஞ்ச, ஊழல் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

# யாழ். முள்ளி பாலத்துக்கு அருகில் வீதி தாழிறக்கம்!

### அச்சத்தில் பயணம் மேற்கொள்ளும் மக்கள்

யாழ்ப்பாணம் – முள்ளி பாலத்துக்கு அருகில் வெடிப்பு ஏற்பட்டு, வீதி தாழிறங்கியுள்ளமையால் பொது மக்கள் அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

வடமராட்சியில் இருந்து தென்மராட்சி நோக்கி பயணிப்பவர்கள் மற்றும் தென்மராட்சியில் இருந்து வடமராட்சி நோக்கி பயணம் செய்பவர்கள் இந்தப் பாதையை அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் இந்த வீதி புனரமைப்பு செய்யப்பட்டு ஒரு வருடமே ஆகின்ற நிலையில், முள்ளி – ஐய்யங்கண்டி மயானத்துக்கு அருகில் உள்ள பாலத்துக்கு அண்மையிலேயே வெடிப்பு ஏற்பட்டு வீதி கீழ் இறங்கியுள்ளது.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர்கள், தென்மராட்சி பிரதேச செயலாளர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையினருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். அதனடிப்படையில் தற்காலிகமான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இதனூடாக ஒரு வழிப் பயணத்தையே மேற்கொள்ள முடிகிறது. இந்நிலையில் பாரவூர்திகள் தொடர்ந்தும் பயணிக்கின்றமையால் முற்றான பயணத் தடை ஏற்பட வாய்ப்புள்ளதுடன் ஆபத்தான பயணமாக அமைந்து காணப்படுகிறது.

# யாழ், பல்கலை மாணவன் ஒருவருக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அழைப்பு

யாழ். பல்கலைக்கழக மாணவனும் ஊடகவியலாளருமான ப.சுஜீவன், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர் ஒருவர், விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய, முகநூலூடாக முனைகிறார் என தேரர் ஒருவர் ஊடக சந்திப்பொன்றில் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்தே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, அவரை விசாரணைக்கு அழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இரு தரப்புக்கும் நட்டம் ஏற்படாத வகையில் சீன உரக் கப்பலுக்கு கொடுப்பனவு வழங்கல்

## அமைச்சரவை முடிவு

இரு தரப்பினருக்கும் நட்டம் ஏற்படாத வகையில், சீன உரத்துக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய விவசாய அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரால் அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

உரத்தைக் கொண்டுவந்த சீன கப்பலுக்கு சுமார் 80 லட்சம் அமெரிக்க டொலரை வழங்குவது தொடர்பாகவே அமைச்சரவையில் பேசப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சீன நிறுவனம் ஏற்கனவே சிங்கப்பூரில் மத்தியஸ்தம் செய்ய முயன்றுவரும் நிலையில் இலங்கையும் தயாரிப்பை ஏற்கவில்லை எனக் கூறிவருகின்றது.

இந்நிலையில் இரு தரப்பினருக்கும் நட்டம் ஏற்படாத வகையில் இலங்கை எவ்வாறு பணம் செலுத்தும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி, 20 ஆயிரம் மெற்றிக் தொன் உரங்களை ஏற்றிக்கொண்டு ஹிப்போ ஸ்பிரிட் கப்பல் சீனாவின் கிங்டாவ் துறைமுகத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

ஆனால் இந்த உரத்தின் மாதிரிகளில் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்கள் கண்டறியப்பட்டமையை அடுத்து கப்பல் சிங்கப்பூருக்குத் திருப்பி விடப்பட்டது.

சீனாவுக்குத் திரும்பாத ஹிப்போ ஸ்பிரிட் கப்பல், கொழும்பு துறைமுகத்துக்குச் செல்வதாக அறிவித்து சிங்கப்பூருக்கு புறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடன் கடிதம் மற்றும் இரு தரப்பினருக்கும் இடையிலான ஒப்பந்தங்களின்படி பணம் செலுத்தத் தவறியதற்காக இலங்கையில் உள்ள சீனத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வணிக அலுவலகத்தால் இலங்கை மக்கள் வங்கி கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

எவ்வாறாயினும், கேள்விக்குரிய வர்த்தக பரிவர்த்தனை தொடர்பாக இலங்கையின் வர்த்தக உயர் நீதிமன்றங்கள் வழங்கிய தடை உத்தரவுக்கு கட்டுப்பட்டதாக மக்கள் வங்கி கூறிய நிலையில் பணம் செலுத்துவதும் தடுக்கப்பட்டது.

# யாழ். அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகர் பத்மநாதனின் நினைவு நிகழ்வு!

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகரும் சங்கத்தின் நீண்டகாலத் தலைவருமான அமரர் எஸ்.ரி. பத்மநாதனின் "நினைவுச் சங்கமம்" நிகழ்வு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சு.சண்முகரத்தினம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை மயிலு மீனாட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமரர் பத்மநாதனின் துணைவியார் திருமதி இராஜேஸ்வரி பத்மநாதனும் புதல்வர் பொறியியலாளரும் கணக்காளருமான ப.சுகந்தனும் அமரரின் உறவினர்களும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் அன்னாரின் அபிமானிகள், பெற்றோர்கள், பயன்பெற்ற மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சுகாதார வழிமுறைகளுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த பல பிரமுகர்களும் நினைவுரையாற்றினர்.

அத்தோடு அமரரின் நினைவாக நூற்றுக்கு மேற்பட்ட



மாணவர்களுக்கு கற்றலுக்கான ஊக்குவிப்புப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவி ஒருவருக்கு சைக்கிளும் வழங்கப்பட்டது.

நிறைவாக அமரரின் நினைவாக அவரது சேவையை மதித்து நினைவுச் சின்னம் அன்னாரின் துணைவி, மகனிடம் அரியாலை அபிவிருத்திச் சங்கத்தால் கையளிக்கப்பட்டது.

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழ்மொழி புறக்கணிப்பு; சிறிதரன் வெளிநடப்பு!

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்தி சார்ந்த கூட்டத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தான் வெளியேறினேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்துள்ளார்.

மொழி பெயர்ப்பாளர் ஒருவரை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் சுமார் ஒரு மணித்தியாலயத்துக்கும் மேலாக இந்த கோரிக்கை தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து தாம் அந்தக் கூட்டத்தில் இருந்து இடைநடுவே வெளியேறினேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித்திங்கள் 10அம் நாள் சனிக்கிழமை மற்றும் 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது)

மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை (டிசெம்பர் 25)

அப்பர் சுவாமிகள் அமர்வு



காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
ஞானலிங்கேச்சரர் கோயில் பூசை

துவக்க உரை :- சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் ( நிறுவுனர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
தலைமை உரை :- பேராசிரியர்.சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா (துணை வேந்தர் - யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)
திருமுறை விண்ணப்பம் (அப்பர் தேவாரம்):- சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்
தொண்டு நெறி :- தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
அடியார் தமக்கு அமுது செய்வித்தல்:- மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

சம்பந்தர் சுவாமிகள் அமர்வு



மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை

தலைமை உரை :- சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் (முதன்மை ஆசிரியர் - வலம்புரி நாளிதழ்)
திருமுறை விண்ணப்பம் (சம்பந்தர் தேவாரம்) :- கலாநிதி. திருமதி.சுகன்யா அரவிந்தன் குழுவினர்
மகன்மை நெறி :- தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
அடியார் பெருமை :- ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு
நன்றியுரை :- சிவத்திரு. அமிர்தலிங்கம் லதாங்கன் (பொதுச் செயலாளர் சைவ மாணவர் சபை)

மார்கழித் திங்கள் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 26)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்வு



காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை

துவக்க உரை - சிவத்திரு.ஜெயபாலன் தவேதன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)
தலைமை உரை : சிவத்திரு.இளங்கோவன் இலட்சுமணன் (செயலாளர் - கல்வி அமைச்சு, வடமாகாணம்)
திருமுறை விண்ணப்பம் (சுந்தரர் தேவாரம்) - சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்.
தோழமை நெறி - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
அடியார் தமக்கு அமுது செய்வித்தல் - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

மாணிக்கவாசக சுவாமிகள் அமர்வு



மதியம் 1.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை

தலைமை உரை : சிவத்திரு.கணபதிப்பிள்ளை மகேசன் (அரசாங்க அதிபர் - யாழ் மாவட்டம்)
திருமுறை விண்ணப்பம் (திருவாசகம்) அன்பு நெறி - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
கௌரவிப்பு நிகழ்வு - தொகுப்பு: சிவத்திரு.தில்லையம்பலம் கௌரீசன் (பொருளாளர் - சைவ மாணவர் சபை)
நன்றியுரை - சிவத்திரு.வனராஜ் சசிராஜ் (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

அணிசெய் இசைக் கலைஞர்கள்



மிருதங்கம் - சிவத்திரு மகேந்திரன் லோகேந்திரன்
வயலின் - சிவத்திரு கேதீஸ்வரன் வேலதீபன்
புல்லாங்குழல் - சிவத்திரு.கமலநாதன் தேசிகன்
முகர்சங்கு - சிவத்திரு. கந்தசாமி நந்தகுமார்

நிகழ்ச்சித் தொகுப்பு: சிவத்திரு.செந்தமிழாதன் (தலைவர் - சைவ மாணவர் சபை) மற்றும் சிவத்திரு.பாலுசாமி சிவமாதவன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 221 2739 075 653 3111



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 221

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 570.அவை என்ன?

நான் ஆதரவுதந்து லண்டனிலிருந்து இயங்கும் தமிழர் தகவல் நிலையம் (Tamil Information Center) சர்வ தேச மனித உரிமைகள் தினத்தை கொண்டாடிய போது இணைய முறையில் பங்காற்றியிருந்தேன். அதில் Oakland Institute இன்அனுராதா மிட்டல் வட கிழக்கு பகுதிகளின் காணி அபகரிப்பு பற்றி சிறப்புரையாற்றினார். அவரது ஆராய்ச்சிகளையும் பதிவுக ளையும் தமிழர் தகவல் நிலையம் வெளியிட்டு


பேராசிரியர் பீற்றர் ஷோக்

சர்வதேச அரசாங்கங்களுக்கு சமர்ப்பிக்கிறது. அத்தோடு ஸ்ரீலங்காவின் மனித உரிமை செயற்பாட்டாளர் பசில் பெர்ணாண்டோ (Basil Fernando), சுவீடனின் உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷோக்(Peter Schalk), தற்சமயம் ஆஸ்திரேலியாவில் வதியும் நீலகண்டர் கந்தசாமி ஆகியோரது மனித உரிமை செயற்பாடுகளுக்காக அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

அதில் பசில் பெர்ணாண்டோவும் கந்தசாமியும்தெரிவித்தவை இந்தப்பித்துக்குழி அரசியலுக்கு ஒரு திசை காட்டியாகும்.

1979ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆக்கப்பட்டு, அதை அமுல்படுத்திப் பயங்கரவாதத்தை அடக்க ஜே.ஆர். தனது மருமகன் Bull வீரதுங்காவை ஆறு மாத தவணை கொடுத்து அனுப்பிய போது அவரது படைகள் முதல் நாளிலே செய்த கொலைகளையும், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைத்தோரை யாரும் பார்க்க விடாது செய்த அட்டூழியங்களையும் அம்பலப்படுத்தி வெளிக்கொணர எடுக்கப்பட்ட செயற்பாடுகளையும் கந்தசாமி விவரித்தார். சாதாரணமாக அமுல்படுத்தப்பட்ட அந்த சட்டம் எவ்வளவு கொடுமைகளை விளைவித்தது என அறிந்தும் - சர்வதேசம் அந்த உண்மைகளை இன்று ஏற்றுக் கொண்டாலும் - தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ந்தும். போர் முடிந்த 12 வருடங்களின் பின்னும், அது பாவிக்கப்படுவது சிங்கள பெரும்பான்மையினரின் மனோபாவங்களை தெரியப்படுத்துகிறது என விளக்கப்படுத்தினார். பாகிஸ்தானில் கொலைசெய்து எரிக்கப்பட்ட இலங்கையருக்காக பரிதாபமும் பச்சாதாபமும் ஆதரவும் பெருமளவில் பொழிகிறது., மத வெறியால் நடந்த - சமூகம் ஏற்காத - கொலை தொடர்பில் கண்டிப்பும் தண்டிப்பும் நடக்கிறது.

கலவரக் காலங்களில் தமிழ் இளைஞன் ஒருவன் தமிழனென்பதற்காக (அவன் சிங்களவருக்கு எதிராக எந்த போஸ்டரும் ஒட்டவுமில்லை, கிழிக்கவுமில்லை) சிங்களவரால் துகிலுரியப்பட்டு பெற்றோல் ஊற்றி தீக்கிரையாக்கப்பட்டான். அன்றிலிருந்து இன்று வரை அது குற்றமாக தண்டிக்கப்படவில்லை. அவனைச் சுற்றி நின்று மிருகங்களாக வேட்டையாடியோர் படங்களில் இருந்தாலும் அவை பதிவுகளாகவே இருக்கின்றன.

பசில்பெர்ணாண்டோ அதைபோன்று இன்னுமொரு சம்பவத்தையும் விவரித்தார். அவர் அப்பொழுது இளவயதான சட்டத்தரணி எனவும், கலவரங்கள் நடைபெற்ற போது சிங்கள காடையர்கள் கார் ஒன்றினை மறித்த போது அதிலிருந்தவர்கள் தமிழரென அடையாளம் கண்டு காருடனேயே பெற்றோல் ஊற்றி எரிக்க முற்பட்ட வேளையில் காரிலிருந்த பெற்றோரின் இரு குழந்தைகளும் அலறகாடையர்கள் அவர்களை வெளியே யெடுத்து பாதையில் நின்ற ஒருவரிடம் கொடுத்தனராம். ஆனால் காரிலிருந்து வெளியேறிய தந்தை குழந்தைகள் இருவரையும் திரும்பவும் காரில் இழுத்து வர சில வாக்குவாதங்களின் பின் எல்லோருமே சுற்றி நின்றவர்கள் முன் சமாதியாக்கப்பட்டனர். குழந்தைகளை திருப்பி காருக்கு எடுத்த வாக்குவாதத்தில் ஏன் அப்படி செய்தார் என தந்தைக்கு அடித்த போது அவர் "எனக்கே இதை, என்னை தெரிந்த நீங்கள் செய்யும் போது நீங்களா இந்த குழந்தைகளை பாதுகாப்பீர்கள்?" எனக் கேட்டாராம். ஓர் இளம் சட்டத்தரணியாக அதைக் கேட்ட தான் உறைந்து விட்டார் எனவும், செய் தவர்களுக்குத் தண்டனை தர எவ்வளவு முயற்சித்தும் அது நடக்காததால் தானே தன்னை கேட்டுக் கொண்ட கேள்வி "தன்னுடைய இந்த மக்கள் சமூகம் எங்கே போகிறார்கள்?அவர்கள் தங்களை கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்விகள் என்ன என்பது தான்" என்றார். ஆனால் நாட்டில் நடப்பவைகளை பார்த்தால் அவர்கள் இன்றும் அந்தக் கேள்விகளை கேட்கத் தயாரில்லை எனத்தெரிகிறது என்றார்.

### 571.இவைபலவீனமா? அறியாத்தனமா?அன்றில் முட்டாள்தனமா?

பாணந்துறையில் ஐயர் தீயிட்டு கொழுத்தப்பட்டபோது, மக்கள் தாக்கப்பட்ட போது, "அவர்கள் ஏன் திருப்பி தாக்கவில்லை" என பிரபாகரன் பின்னர் கேட்டார் எனவும், அரது போராட்ட வளர்ச்சியின் சிந்தனைக்கு அது உன்னியது என்பதும் வரலாறு. தமிழ் மக்களும் தாங்கள் ஏன் இந்த நிலைக்கு வந்தோம் எனத் தங்களைக் கேட்டிருக்க வேண்டும். ஆனால் மந்தைகள் போல் நடத்தப்படுகிறார்கள். புதிய புதிய அரச மைப்புக்களை இயற்றுவது, ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதல்ல முக்கியம். அவற்றை நடைமுறைப்படுத்த விருப்பமும் அதற்கான பக்குவமும் மனோபாவமும் இருப்பதுதான் முக்கியம். அது இல்லாவிட்டால் அவை எல்லாம் வெற்றுக் காகிதங்கள்தான்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் வரிகளில் எம்.ஜி.ஆரின்பெயர் பெற்ற பாடல் ஒன்று இப்படிச் சொல்கிறது:-

*"திருடாதே பாப்பா திருடாதே*
*திட்டம் போட்டுதிருடுகிற கூட்டம்திருடிக்*
*கொண்டே இருக்குது*
*அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம்*
*தடுத்து*
*கொண்டே இருக்குது*
*திருடராய் திருந்தா விட்டால் திருட்டை*
*ஒழிக்க*
*முடியாது, பாப்பா திருட்டை ஒழிக்க*
*முடியாது"*

- இந்த விழிப்புணர்வு தமிழ் மக்களின் "பாப்பா" தலைவர்களுக்கும் வர வேண்டும். வயதானவர்கள் தெரிந்திருந்தாலும் அரசியலே செய்தார்கள்.

சாணக்கியரது கூட்டத்தில் சுமந்திரன், ராஜபக்ஷவே 13 ஆம் திருத்தத்தில் ஒன்று மில்லை என்கிறார். இங்கு சிலர் அப்படி ஒன்றுமில்லாத 13 ஆவது திருத்தத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க கடிதங்கள் எழுத வேண்டும் என நிற்கிறார்கள் - என்கிறாரே?

தான் 13க்கும் மேல் தருவேன், ஆனால் தனக்கு விடுதலைப் புலிகளின் போராட்டத்தை முடித்து விடுங்கள், அதன் பின் சிங்கள மக்களிடம் 13 ஆம் திருத்தத்துக்கும் மேல் போய் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள வைப்பது சுலபம் என்றார். யாருக்காக இவற்றை சொன்னார் என்பது இலகுவில் புரியும்.

13 ஆம் திருத்தத்தில் ஒன்றுமில்லை என்றால் வட கிழக்கு இணைப்பை துண்டாட வழிபார்த்து இருக்க மாட்டார். பொலிஸ் காணி அதிகாரங்களைத் தரத் தயங்கத் தேவையில்லை.

13 ஆம் திருத்தத்தில் ஒன்றுமில்லை, தமிழ் மக்கள் அதில் தொங்கி கொண்டிருக்க கூடாது என்று சுமந்திரன் சொல்லி அதற்கு ராஜபக்ஷவை ஓணானாக சாட்சியாக்குவது இன்னொரு வித அரசியல்.

அது கூட்டாளி தலைவர்களை ஓரம் கட்டுவதற்கான வடிவமைப்பு என எண்ணுகிறேன் அல்லது அவற்றுக்கு மேலே முந்து போய் தனிமனித உரிமைகள் பேணப்படுவதற்கும் பாதுகாக்கப்படுவதற்குமான அரசமைப்புச்சட்ட வரைவுகள் வந்து விட்டால் 13 ஆம் திருத்தமே தேவையில்லை, ஒரு நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்பட்டு எல்லோரும் வாழலாம் என்ற சிந்தனையாகலாம்.

ஒரு பகுதி 13 ஆவதை வைத்துக் கட்டுமானங்களைப் பார்க்கிறது. சுமந்திரனது சிந்தனை அதை விடுத்து, புதிய கட்டுமானங்களை மனித உரிமைகள் மதிக்கப்படும் யாப்புகளில் பார்க்கிறது.

இவற்றில் அவர் பேசுவதை 4 டிசெம்பர் 2021 நாடாளுமன்றத்தில் தாம் ஏன் அமெரிக்கா, கனடா பிரித்தானியா நாடுகளுக்கு ஆதரவு தேடிச் சென்றோம் என்பதை நியாயப்படுத்த கூறிய நியாயங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

அதில் 13 ஆம் திருத்தத்துக்கு கீழே தரப்பட்டவை பலவும் பின்னால் மீளப் பெறப்பட்டனஎன்றும், அரசாங்கங்களால் அவை எப்பொழுதும் பேசப்பட்டாலும் தரப்படவில்லை, ஆகவே தமிழ் மக்களது உரிமைகள் மதிக்கப்படாவிட்டால் சர்வதேச அனுசரணையுடன் சுய நிர்ணய உரிமையை நாட வேண்டும் என்றும் சொன்னார். இவை சரித்திரம். அந்த சுயநிர்ணயஉரிமையைக்கோருவதற்கு அவர்களின் பிரதேசங்களும் கூட்டுறவு வாழ்க்கை இயல்பும் மொழி கலாச்சாரங்கள் தக்க வைக்கப்பட வேண்டும். அதற்கு பாதுகாப்புக்கள் தேவை

"இவற்றுக்கு கடிதங்கள் எழுத வேண்டும் என நிற்கிறார்கள்" என அவர் வெளிப்படுத்தும் பின்னணியையும் தமிழ் மக்களுடன் இப்போழுது பகிர்ந்து கொள்வது அவசியம். அதற்கு முன்னோடியாக இவற்றை அறிய வேண்டும்.


'புல்' வீரதுங்க

தமிழ் நெற் (Tamil Net) இன் வாதம் நான் முன் சுட்டிக்காட்டிய 2நவம்பர் 21 பதிவில் இப்படியாக இருக்கிறது:-

"இத்தருணத்தில் பரந்து பட்ட தமிழர் தரப்புக்கு இருக்கும் தலையாய கடமை என்னவென்றால் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணைக்குரிய கோடி காட்டலை ஐ.நா. மனித உரிமை பேரவைக்குள் கொண்டுவருமாறு சர்வதேச தரப்புக்களை வலியுறுத்தி அழுத்தம் தரும் நடவடிக்கைகளைப் பல மடங்கு பல மாக்கிவீரியத்துடன்முன்னெடுப்பதாகும். இதைச் சாதகமாக்க வேண்டுமானால், இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் இணைந்து முன்வைக்கும் பாதகமான இணக்க அரசியல் எனும் தடையோட்டத்தை முறியடித்து வெற்றிகரமான பாய்ச்சல்களை தமிழர் தரப்பு மேற்கொண்டாக வேண்டும்"

### 572.சொல்வதும் எழுதுவதும் சுலபம். செயல்வடிவம் எந்த ரூபத்தில் வரவேண்டும்?

போருக்குச் பின்னான 12 வருடத்தில் கூட எந்த ஒரு சர்வதேச நாடும் எமக்கு ஆதரவாகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

அதில் எரியும் நெருப்பில் எண்ணை வார்ப்பது போல் புலம்பெயரின் சில அமைப்புக்கள் எமது இனப்படுகொலைக்கு அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்றவை பங்குதாரிகளாகின, அவர்களது பங்கு பற்றலும் விசாரிக்கப்பட


பசில் பெர்னாண்டோ

வேண்டும் என்று பகிரங்கப்படுத்தி விட்டு, இப்பொழுது அவர்களையே சர்வதேச மனித உரிமை மன்றில் இவற்றுக்கு ஆதரவு தர கோருவது எவ்விதத்திலும் பொருத்தமானதோ பயன் தரக் கூடியதாகவோ காணப்படவில்லை. அரசியலையும் சட்ட நடவடிக்கைகளையும் பிரித்துப் பார்க்காமல் எல்லாம் எங்களிடமே என நடக்கும் சில புலம் பெயராளரின் செயற்பாடுகள் இவை.

வெற்றிகரமான பாய்ச்சல்களை எப்படி தமிழர் தரப்பு மேற்கொண்டாக வேண்டும் என்பதில் அறிவுரைகள் தராமல், ஆனால் செய்வதை தடுக்க வேண்டும் என்ற சித்தாந்தம்தான் மேலோங்குகிறது.

### 573.எவை தடுக்கப்படுகின்றன?

அதே தமிழ் நெற் பதிவில் "இதற்கு வேண்டிய கருத்தொற்றுமை தமிழர் தரப்பில் ஏற்படாது தடுக்க வேண்டும் என்றால் பதின் மூன்றை ஆரம்பப் புள்ளியாக வலியுறுத்தும் இணக்க அரசியலைத் தமிழர்களுக்குள் புகுத்த வேண்டிய தேவை மிலிந்த மொரகொட மற்றும் ஜி.எல்.பீரிஸ் தரப்புகளுக்கும் பசில் ராஜபக்ஷ போன்றவர்களுக்கும் நிச்சயம் இருக்கும் என்பதை நாம் உணர வேண்டும்." - என்று உள்ளதைக் கவனியுங்கள்.

(வளரும்)

# மக்களின் வாழ்க்கையுடன் முன்னெடுக்கும் மனிதாபிமானமற்ற பாவகர விளையாட்டை அரசாங்கம் உடன் நிறுத்தவேண்டும்!

## சஜித் கோரிக்கை



நாட்டு மக்களின் நலனுக்காக எதுவுமே செய்யாத அரசாங்கம் என்ற வரலாற்று நாமத்தை பெற்றுள்ள தற்போதைய அரசாங்கம், கடந்த காலங்கள் பூராகவும் நாட்டுக்கு உரித்தாக்கியது எந்தளவு மோசமான நிலைமை என்பதை நாளுக்கு நாள் நடக்கும் சம்பவங்களின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அதன் அண்மைக்காலத்தில் இடம் பெற்ற சம்பவம் எதுவெனில், அரசாங்கத்தின் தலையீட்டுடன் விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட திரவ உர கொள்கலன் வெடித்தமை ஆகும்.

தற்போதைய போக நெற் பயிர்செய்கைக்கு செலுத்துவதற்காக கமத்தொழில் திணைக்களத்தால் தமது விவசாய அமைப்புகளுக்கு 200 திரவ உர கொள்கலன்கள் வழங்கப்பட்டன எனவும் அவற்றில் 100 கொள்கலன்கள் வெடித்துள்ளன எனவும் இதன்காரணமாக திரவ உரம் விரயமாகியுள்ளதாக ஹொரவ பொத்தானை விவசாய அமைப்பின் ஊடாகத் தகவல் கிடைத்துள்ளது. இது மாத்திரமன்றி நாடுபூராகவும் இவ்வாறு திரவ உர கொள்கலன் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. நாட்டின் விவசாயிகளை எந்தளவுக்கு இந்த அரசாங்கம் ஏமாற்றியுள்ளது என்பது இந்தச் சம்பவங்களின் ஊடாக உறுதியாகியுள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரத்தில் எந்தவொரு தரமோ, தரச்சான்றிதழோ, நம்பிக்கையோ, சுகாதார பாதுகாப்போ இல்லை. ஆனால் எங்கோ உள்ள அரசாங்கத்தின் உற்ற நண்பர்கள் கும்பலுக்கு இதன் இலாபம் கிடைக்கும் என்பது உறுதி.

வரலாற்றில் எந்தவொரு யுகத்திலும் எந்தவொரு அரசாங்கமும் விவசாய தலைமுறையினரை இந்தளவுக்கு துரதிஷ்ட மோசமான நிலைமைக்குத் தள்ளவில்லை என்பதுடன் அரசாங்கத்தின் இந்த மோசமான செயற்பாடுகள் மற்றும் பொறுப்பற்ற தீர்மானங்களால் ஒருபுறம் நாட்டின் விவசாய தலைமுறையினரையும் மறுபுறம் நாட்டின் பொருளாதாரத்தையும் பல தசாப்தங்களுக்குக் கட்டியெழுப்ப முடியாத அதள பாதாளத்துக்குத் தள்ளப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது. தற்போதைய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது முதல் செய்தது இந்நாட்டுப் பிரஜைகளை ஆய்வு கூடத்தின் எலிகளாக மாற்றியதுடன் தமக்கு சாதகமான தீர்மானங்களை கொண்டு வந்து நாட்டை மோசமான நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளதாகும்.

விசேடமாக இந்நாட்டில் தொடர்ந்து நாளாந்தம் கொரோனா மரணங்கள் பதிவாகின்றன. இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காத காரணத்தால் தற்போது கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கிட்டியுள்ளது.

சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் 620 இற்கும் அதிகமாகப் பதிவான போதும் இது தொடர்பில் நிலையானதும் சீரானதுமான விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் தவறியுள்ளது.

தற்சமயம் இலங்கை ஏல விற்பனை பூமியாக மாற்றப்பட்டுள்ளது. பொறுப்பற்ற ஆட்சியாளர்களால் முழு நாடும் அபாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களுக்கும் நட்புறவு கொண்டாடும் கும்பலுக்கும் நாட்டின் தேசிய வளத்தைத் தாரைவார்த்து கொண்டிருக்கும் தறுவாயில் அமைச்சரவை வெறும் சமிக்ஞை தூணாக ஆகியுள்ளது.

நாட்டின் வலுசக்தி தொடர்பான பாதுகாப்பையும் காட்டிக்கொடுக்க அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான மோசமானதும் துரதிஷ்டமானதுமான நிலைமைக்கு நாட்டை தற்போதைய அரசாங்கம் தள்ளியுள்ளதுடன், இதற்கு மத்தியில் ஆளும் கட்சி அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கற்பனை உலகில் மூழ்கி சுபீட்சம் தொடர்பாக புகழ் பாடி வருகின்றனர். எனவே நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் முன்னெடுக்கும் மனிதாபிமானமற்ற பழிவாங்கல்களை உடன் நிறுத்துமாறு நாம் அரசாங்கத்திடம் வேண்டிக் கொள்கிறோம். – என்றார்.



## இலங்கைக்கான லொட் பொலிஷ் எயார்லைன்ஸின் நேரடி விமானசேவையை ஆரம்பிப்பது தொடர்பில் ஆய்வு

இலங்கை மற்றும் போலந்துக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் முழுமையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் நோக்கில் அரசியல், வர்த்தகம், முதலீடு, சுற்றுலா உறவுகள் மற்றும் மக்களுக்கிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் ஒரே நேரத்தில் அங்கீகாரம் பெற்ற போலந்து தூதுவர் அடம் புராகோவ்ஸ்கி, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின்போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.


இலங்கைக்கான லொட் பொலிஷ் எயார்லைன்ஸின் நேரடி விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை முன்னிட்டு, தூதுவர் புரகோவ்ஸ்கி கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டுடன் 65 வருடங்கள் நிறைவடையுள்ளமையை நினைவு கூர்ந்த அமைச்சர், போலந்துடனான பன்முகப் பங்காளித்துவத்தை மேலும் முன்னேற்றுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தினார். இதன்போது இரு நாடுகளினதும் வணிக சபைகளுக்கு இடையேயான வழக்கமான தொடர்புகளின் அவசியம் தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கை ஏற்றுமதிக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் சந்தையின் முக்கியத்துவத்தின் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை ஒத்துழைப்பு தொடர்பாக அமைச்சர், தூதுவருக்கு விளக்கமளித்தார்.

போலந்தின் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் இருவழி சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக 2022 இல் இலங்கையில் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஒரு நிகழ்வு பற்றியும் தூதுவர் தெரிவித்தார்.

## வளர்ந்தோருக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு இலங்கை சார்பாகப் பங்குபற்ற சண்.தயாளன் தெரிவு!





*கடந்த 11, 12 ஆம் திகதிகளில் கொழும்பு சுகதாச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற வளர்ந்தோருக்கான ஆசிய மட்ட தெரிவுப் போட்டியில் கலந்து கொண்ட சண். தயாளன் தான் பங்குபற்றிய ஈட்டி எறிதல் மற்றும் கோலூன்றிப்பாய்தல் நிகழ்ச்சிகளில் 60-65 வயதுப் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டார். ஈட்டி எறிதல் 32.54 மீற்றர் தூரத்தை எட்டிய அவர், கோலூன்றி பாய்தலில் 2.20 மீற்றர் பாய்ந்தமை குறிப்பிடத்தக்கது.*

*இந்தப் பெறுபேறு மூலம் வரும் பங்குனி மாதம் இடம்பெறவுள்ள வளர்ந்தோருக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு இலங்கை சார்பாகப் பங்குபற்ற சண். தயாளன் தகுதி பெற்றார்.*

*யாழ் கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற சண். தயாளன் சிறந்த விளையாட்டு வீரராவார்.*

*யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான சண். தயாளன் பாடசாலைக் காலத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், ஹொக்கி, கூடைப்பந்தாட்டம் மற்றும் மெய்வன்மை விளையாட்டுக்களில் கொடி கட்டிப் பறந்தவர். இந்த விளையாட்டுக்களில் யாழ். மாவட்ட அணிகளைப் பிரதிநிதிப்படுத்தியவர்.*

*1976, 1977 ஆம் ஆண்டுகளில் முறையே சிங்கப்பூரிலும், இந்தியாவின் ஆக்ராநகரிலும் நடைபெற்ற ஏழாவது மற்றும் எட்டாவது ஆசிய இளைஞர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளிலே இலங்கை இளைஞர் உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரராகக் கலந்து கொண்ட அவர், எட்டாவது ஆசிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய இலங்கை அணிக்குத் தலைமை வகித்திருந்தார்.*

*அவர் பெரிதும் மதிக்கப்பட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர். கிரிக்கெட் நடுவர். கூடைப்பந்தாட்ட மற்றும் ஹொக்கி மத்தியஸ்தரும் கூட. மெய்வன்மை தட, கள மத்தியஸ்தரான அவர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொடக்குநருமாவார்.*

*62 வயதிலும் சளைக்காமல் விளையாடும் திறன் கொண்ட ஒரு வீரராக அவர் மதிக்கப்படுகின்றார்.*

## இலங்கையின் முதல் கேபிள் கார் திட்ட ஒப்பந்தம் கையெழுத்தானது

நுவரெலியா பிரதேசத்தில் கேபிள் கார் திட்டத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் அரசாங்கம் சுவீடன் நாட்டு நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ளது.

2 கட்டங்களைக் கொண்ட கேபிள் கார் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 18 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நானுஓயாவிலிருந்து நுவரெலியா வரை 4 கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் இந்த கேபிள் கார் பாதை சுவீடன் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் முழுமையாக நிதியளிக்கப்பட்டுள்ளது.

5.5 கோடி அமெரிக்க டொலர் செலவில் 30 ஆண்டு குத்தகைக்கு இந்தத் திட்டம் உருவாக்கப்படும். இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சகத்தின் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

## பண்டிகைக் காலத்தில் மதுபானம் விற்பதற்கு அனுமதி வழங்கவில்லை

நத்தார் பண்டிகையின்போது ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் ஊடாக மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை என கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

நத்தார் தினத்தன்று சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரமே மதுபானம் வழங்குவதற்கு கடந்த காலங்களில் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு நத்தார் தினத்தன்று மதுபானம் வழங்குவதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக இதுவரையில் எவ்வித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இது தொடர்பாக இதுவரை தீர்மானமும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் அரசு இல்லை!

## அடித்துக்கூறுகிறார் ஜனா எம்.பி.



ஒரு தேர்தலை எதிர்கொள்ளும் நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை, அரசியல் ரீதியாகவும் இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு தற்போது நான்கு வருடங்களுக்கு மேலாகின்றது. வடக்கு மாகாணசபையும் கலைக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகின்றது. அதேபோன்று அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை, சுகாதார நிலைமை என்பன வெளிப்படையான விடயம்.

நாட்டின் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவிற்குச் செல்லும் நிலைமை தான் நாட்டின் தற்போதைய நிலையாக இருக்கின்றது.

வரவு - செலவுத் திட்ட விவாதம் நடக்கும் போது நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்க வேண்டிய நிலையில் அவர் கடன் கேட்டு வெளிநாடு செல்கின்றார்.

கடந்த வருடம் இந்த நாட்டை விட படுமோசமாக இருந்த பங்களாதேஷிடம் இலங்கை அரசாங்கம் கடன் வாங்கியிருக்கின்றது. இந்த நிலையில் மாகாணசபைத் தேர்தலையோ இன்னுமொரு தேர்தலையோ வைக்கக்கூடிய நிலைமை இந்த அரசாங்கத்திடம் இல்லை.

வருகின்ற வருடம் மார்ச் மாதத்துடன் உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படலாம். சிலவேளைகளில் தேர்தல் நடத்த முடியாவிட்டால் உள்ளூராட்சி சட்டத்தின் படி ஒரு வருடங்கள் நீடிக்கக் கூடிய நிலைமையும் ஏற்படலாம் அல்லது உள்ளூராட்சி மன்றங்களையும் கலைத்து விட்டு உறுப்பினர்களுக்கான நிதியையும் மீதப்படுத்துகின்றோம் என்ற பெயரில் ஆணையாளர், செயலாளர்களுக்குக் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைக் கொண்டு வரலாம். எதுவும் எந்த நேரமும் நடக்கும்.

ஆனால் ஒரு தேர்தலை வைக்கக் கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை, அரசியல் ரீதியாகவும் பலமிழந்த நிலையில் இருக்கின்றது. அந்த விடயம் அரசாங்கத்துக்கே தெரியும். ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தில் இருக்கின்ற சில அமைச்சர்கள் கூட இதனை ஒத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையில் அரசாங்கம் தேர்தலுக்குச் செல்லாது.

ஆனால், மகாணசபைத் தேர்தலை வைக்க வேண்டும் என்று நாங்கள் மிக உறுதியாக இருக்கின்றோம். அண்மையில் கூட வடக்கு கிழக்கில் இருக்கக் கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் பேசும் கட்சிகள் அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை வரவேற்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இனப்பிரச்சினைக்கு ஓர் ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொண்ட கட்சிகள் கூடிக் கலந்துரையாடியிருந்தோம்.

இந்திய மூலமாக மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் இலங்கைக்கு ஓர் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும், மாகாண சபைகளுக்கு உரிய முழுமையான அதிகாரங்களைக் கொடுத்து அந்தத் தேர்தலை வைக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்தியாவிற்கு விடுத்திருக்கின்றோம்.

மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று மாகாணசபை முழு அதிகாரங்களுடன் இருக்குமாக இருந்தால் எமது ஊழியர்கள் இவ்வாறு ஐந்து, ஆறு வருடங்கள் தற்காலிக, அமைய தொழிலாளர்களாக வேலை செய்யக் கூடிய நிலைமை இருக்காது. மாகாணசபைகளுக்கு தற்போது இருக்கும் அதிகாரங்களின் அடிப்படையில் மாகாணசபை நினைத்தால் கூட ஊழியர்களை நிரந்தரமாக்க முடியாது. ஏனெனில் மாகாணசபைகளின் ஊழியர்களுக்கான சம்பளம் மத்திய அரசின் திறைசேரியில் இருந்து தான் வர வேண்டும். திறைசேரியின் அனுமதியைப் பெற்று நியமனம் வழங்கக் கூடிய விதத்திலேயே தற்போதைய மாகாணசபையின் அதிகாரம் இருக்கின்றது.

எனவே, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாணசபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தனவோ அந்த அதிகாரங்கள் அனைத்தையும் உள்வாங்கி அதிகாரங்களைப் பரவலாக்கி இந்த மாகாணசபைத் தேர்தல் வைக்கப்படல் வேண்டும். அவ்வாறானதொரு நிலைமை வருமாக இருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வரும். - என்று தெரிவித்தார்.

## நானாட்டான் பிரதேச சபையின் 'பட்ஜட்' குழப்பங்களுக்கு மத்தியில் நிறைவேறியது

நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், தலைவர் உட்பட 8 உறுப்பினர்களின் வாக்குகளால், குழப்பங்களுக்கு மத்தியில் நிறைவேறியுள்ளது.



நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் சபை அமர்வு, தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணியளவில், நானாட்டான் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்வாறு கூட்டம் ஆரம்பமாகியதில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் எதிர்த்தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. ஆனாலும் வரவு - செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பு பகிரங்கமாக இடம்பெற்றது.

இதன்போது நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், மேலதிகமான ஒரு வாக்கினால் 9 வாக்குகள் பெற்று நிறைவேறியுள்ளது.

அதாவது, தலைவர் உள்ளிட்ட 7 உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவரும் உள்ளடங்களாக 8 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். அந்தவகையில் தவிசாளரின் மேலதிக வாக்கினால் வரவு - செலவுத் திட்டம் வெற்றி பெற்றது.

குறித்த வரவு - செலவுத் திட்டத்துக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், உதய சூரியன் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த 7 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். ஈ.பி.டி.பி.கட்சி உறுப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

## தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டி வெற்றி நிகழ்வு யாழ்.செயலகத்தில் நடந்தது





(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிசெ. 15

தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ்.மாவட்ட செயலகம் முதலிடம் பெற்றதை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்கள் பாராட்டப்பட்டதுடன் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் 2018/2019 ஆம் ஆண்டை தழுவி நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ்.மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றதை முன்னிட்டே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

திங்கட்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) முரளீதரன், யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், உற்பத்தித் திறன் பிரிவு அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உற்பத்தித்திறன் குழுவினருக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## புதிய செறிமானம் அடங்கிய எரிவாயுவை திருப்பி அனுப்ப அதிகாரிகள் தீர்மானம்

அண்மையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட லிட்ரோ எரிவாயுவில் உரிய செறிமானம் இல்லாதமையால் அதனைத் திருப்பி அனுப்ப அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லிட்ரோ சமையல் எரிவாயுவால் கப்பல் ஊடாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட புதிய செறிமானம் அடங்கிய எரிவாயுவின் தரம் தொடர்பில் அறிவிக்கவுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகார சபை மற்றும் நிறுவனங்களுடனான இன்றைய சந்திப்பை அடுத்து இது தொடர்பாக அறிவிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பலில் அடங்கியுள்ள எரிவாயு தரம் குறைந்ததாயின் அதனை மீள ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் சமையல் எரிவாயுவில், மணத்தை அறிந்துகொள்ளும் பதார்த்தமான, எத்)தில் மேகெப்டனின் அளவு, 14 இற்கும் 15 இற்கும் இடையில் இருக்க வேண்டும் என்ற போதிலும், அதற்கும் குறைந்த மட்டத்திலேயே அது இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அதேநேரம், ப்ரொப்பேன் மற்றும் பியூட்டேன் விகிதங்கள் 29 இற்கு 69 என்ற அடிப்படையில் இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுயாதீன நிறுவனத்தின் பரிசீலனையின்படி, இந்த எரிவாயுவில் 33 சதவீத ப்ரொப்பேன் அடங்கியுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தால் அண்மையில் 3 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் அடங்கிய எரிவாயு கப்பல் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, அதிகாரிகள் அந்த எரிவாயுவின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடுவதா?

## குழப்பத்தில் ராஜபக்ஷ அரசு



நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடும் விவகாரத்தில் இலங்கை அரசு 'மதில் மேல் பூனை' நிலைப் பாட்டிலேயே இருந்து வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே சிறந்த வழியென அரசிலுள்ள ஒரு சிலரும், அவ்வாறானதொரு தேர் வுக்கு அரசு சென்று விடக்கூடாது என மற்றுமொரு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தால் முன் வைக்கப்படும் நிபந்தனைகளை நிறைவேற்ற முற்பட்டால் அது உள்நாட்டில் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்து, ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் என்பதே, 'வேண்டாம்' என வலியுறுத்தும் தரப்பின் கருத்தாக உள்ளது.

ஆனால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகள்கூட இலங்கைக்குப் பாரிய தொகை கடன்களை வழங்குவதற்கு தயக்கம் காட்டும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே ஒரே வழி எனவும், அவ்வாறு இல்லா விட்டால் நெருக்கடி நிலை உருவாகும் எனவும் 'வேண்டும்' என வலியுறுத்தும் தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றிரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஐ.எம்.எப். விவகாரம் பற்றி ஆராயப்பட்டது. எனினும், இறுதி முடிவு எட்டப்படவில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பில் கடும் குழப்பத்தில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ்.மாநகர சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமையும் என்று சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் தலைவர் சி.ஆ.ஜோதிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுவது தற்போது வழக்கமாகிவிட்டது. வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

அபாய இடங்களிலே, குறிப்பாக சிங்களதரப்புக்கு கைமாறக்கூடிய வகையில் இருக்கின்ற பிரதேச சபைகளிலே தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து கவனமாக செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர்களோ அந்தப் பொறுப்பை உதாசீனம் செய்து இருக்கின்றார்கள் என்றே கூற வேண்டி இருக்கின்றது.

நாளை (இன்று) யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் விவாதத்துக்கு வர இருக்கின்றது. அந்த வரவு - செலவுத் திட்டத்தையும் தோற்கடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

கட்சி மற்றும் அரசியல் ரீதியான முரண்பாடுகளை மாநகர சபை நிர்வாகத்தின் கீழ்கொண்டுவருவதற்கு கட்சிகள் முயன்று கொண்டிருக்கின்றன. இந்த வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமாக இருந்தால் பல பாதிப்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

மாநகர சபையைக் கலைக்கக்கூடிய ஓர் அபாயம் ஏற்பட வாய்ப்பு உண்டு. மாநகர சபை சட்டத்தின்படி இரண்டு தடவைகள் மேயர் பதவி நீக்கப்பட்டால் மாநகர சபை கலைய வேண்டிய ஓர் அபாயம் இருக்கின்றது. இந்த அபாயம் பற்றி இந்தக் கட்சிகளுக்குத் தெரியாது என்று கூறிவிட முடியாது. ஆனால், அவர்கள் தங்களுடைய கட்சி அரசியலுக்காக இந்தச் செயற்பாட்டை செய்கின்றார்கள்.

கலைக்கப்பட்ட மாநகர சபை, மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டால் தமிழ் மக்களின் கை விலகுவதோடு ஏற்கனவே வடக்கை நோக்கி பெரும் தேசியவாதம் தன்னுடைய நிகழ்ச்சிநிரலை நடத்துவதற்கு முயற்சிக்கின்ற செயற்பாடு மேலும் துரிதம் அடையக்கூடிய அபாயம் ஏற்படும்.

மாநகர சபையின் செயற்பாடுகளில் பல தடங்கல்கள் ஏற்படும். அதனுடைய நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மட்டுமல்ல அபிவிருத்திச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்ற சூழல் உருவாகும்.

யாழ். மாநகர சபை சமூக முதலீட்டுடன் தமிழ் மக்களுடைய மரபுரிமை சொத்துக்களைப் பாதுகாக்கின்ற செயற்பாட்டை ஆரம்பித்திருக்கின்றது.

தமிழ் தொழிலதிபர்களின் உதவிகளைப் பெற்று இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆரியகுள செயற்பாடு இவ்வாறே முன்னெடுக்கப்பட்டது. அதனுடைய வரலாற்று அம்சங்கள் அங்கே நினைவுக்கல்லாக பொறிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபை வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் பெருந்தேசியவாதத்தினுடைய நிகழ்ச்சி நிரல் இங்கே மேடையேறுவதற்கான வாய்ப்புக்கள் அமையும். ஆகவே, அரசியல் கட்சிகளிடம் நாங்கள் விநயமாகக் கேட்டுக்கொள்வது தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளிலே உங்கள் கட்சி அரசியலைச் செய்ய வேண்டாம்.

யாழ்ப்பாணம் மாநகர சபை தமிழ் மக்களின் பொதுச் சொத்து. அந்த மாநகர சபையை அனைவரும் இணைந்து சுமுகமாக செயற்படுத்துவதற்கான சூழலை உருவாக்க வேண்டும். இதனைச் சுமுகமாகச் செய்ய வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அந்தப் பொறுப்பில் இருந்து யாரும் விலகிவிட முடியாது.

வரவு - செலவுத்திட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமாக இருந்தால் அந்தத் திருத்தத்தைக் கொண்டு வாருங்கள். அதனைப் பேசுங்கள். அதற்கு சில வேளைகளில் மேயர் உடன்படாவிட்டால் மக்களிடம் கொண்டு வாருங்கள். அது சரியானதென்றால் அதில் திருத்தங்களைச் செய்ய மக்கள் அழுத்தங்களைக் கொடுப்பர். மாநகர சபை ஒழுங்காக செயற்படுவதற்கு ஒரு சூழலை உருவாக்குங்கள். அதைவிட்டுத்து கட்சி முரண்பாடு காரணமாக மாநகர சபையின் செயற்பாடுகளை முடக்க வேண்டாம் - என்றார்.

### ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரத்தை ஜனாதிபதி பயன்படுத்தியுள்ளார்.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அந்நிய செலாவணி இருப்பு, நிதி நெருக்கடி, கோப் குழுவில் மாற்றம் உள்ளிட்டவற்றைக் கருத்தில்கொண்டா ஜனாதிபதி நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தினார் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்துவதற்கான அதிகாரம் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. 1978 ஆம் ஆண்டுமுதல் இற்றைவரை பதவியிலிருந்த ஜனாதிபதிகள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளனர். எனவே, இது விசேட நடவடிக்கையாக அமையாது. அரசமைப்பின் பிரகாரம் இடம்பெறும் நடவடிக்கை.

நாடாளுமன்றம் கூடும்போது குழுக்கள் மறுசீரமைக்கப்படும். அதேபோல் சபை நடவடிக்கைகளையும் உரிய வகையில் முன்னெடுக்க முடியும். எனவே, இந்த இடைநிறுத்தம் தொடர்பான வீண் ஊகங்கள் தேவையற்றவை - என்றார்.

### ஆஸ்திரேலியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று விஜயம் செய்தார்.

இதன்போது வைத்தியசாலையின் செயற்பாடுகள் பற்றியும், தொடர்ச்சியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கி வரும் ஆஸ்திரேலிய மருத்துவ உதவி அமையத்தால் வழங்கப்படும் உதவிகள் பற்றியும் பேசப்பட்டது என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## மணிக்கு விக்கி வக்காலத்து



(ந.லோகதயாளன்)

கட்சி சார்பான முரண்பாடுகளால் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத்திட்டத்தை தோற்கடித்து ஒரு தகுதி வாய்ந்த மாநகர மேயரை இழக்க இடமளிக்காதீர்கள்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்களிடம் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணித் தலைவரும் முன்னாள் வடமாகாண சபை முதலமைச்சருமான யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதால் மேயர் வி.மணிவண்ணனை வெளியேற்றலாம் என்ற எண்ணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை நான் அறிவேன். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் சொந்த நலன்களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதால்தான் இவ்வாறான சிந்தனைகள் மேலோங்குகின்றன.

யாழ் மக்களின் நலன் பற்றியோ, வருங்காலம் பற்றியோ சிந்திக்காது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

மணிவண்ணன் எங்கள் கட்சி உறுப்பினர் அல்லர். ஆனால், அவர் மக்கள் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர். தமிழ் மக்கள் சிந்தனையைத் தகுந்த விதத்தில் உள்நாட்டவர்களிடமும் வெளிநாட்டவர்களிடமும் கொண்டு செல்லக் கூடியவர்.

அவரின் திறனும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மற்றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது என்பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் ஒரு தகுதி வாய்ந்த மாநகர மேயரை இழக்க நாங்கள் இடமளிக்கக் கூடாது.

இந்தக் கால கட்டம் நெருக்கடி மிக்கது. அறிவு, ஆளுமை, அதிகாரம் கொண்டவர்களை நாங்கள் பதவி இழக்கச் செய்தோமானால் அரசின் கரவான நடவடிக்கைகளைக் கண்டிக்க முடியாமல் போய் விடும்.

எனக்கு மணிவண்ணனைத் தனிப்பட்ட முறையில் அதிகம் தெரியாது. ஆனால், அவரின் செயல்கள் பேச்சுக்கள் அவரை எனக்கு அடையாளப்படுத்தியுள்ளன.

தயவு செய்து பதவியில் இருக்கும் மாநகர மேயரைக் கட்சிக் காரணங்களுக்காக வெளியேற்றாதீர்கள் என்று அனைத்து யாழ். மாநகர சபை உறுப்பினர்களிடமும் அன்பான கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றேன் - என்றுள்ளது.

## வடமராட்சியில் விரிவுரையாளர் வீட்டில் வெடித்துச் சிதறியது எரிவாயு அடுப்பு!

யாழ்., வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியதால் விரிவுரையாளரின் மனைவி சிறு காயங்களுக்குள்ளாகி யுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் அ. பௌ நந்தி வீட்டிலேயே இந்தச் சம்பவம் நேற்று காலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வழமை போன்று நேற்று காலையில் விரிவுரையாளரின் மனைவி உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது. அதன்போது வெடித்துச் சிதறிய அடுப்பின் பாகம் ஒன்று விரிவுரையாளரின் மனைவியின் தலையில் பட்டதில் அவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

அதேவேளை, அடுப்பு வெடித்துச் சிதறிய அதிர்வில் சமயலறையின் சீலிங் சீட்டும் வெடித்துள்ளது. எரிவாயு சிலிண்டர் நேற்றே மாற்றப்பட்டிருந்தது என விரிவுரையாளர் தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு 2 குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கப்பட்டன

## சுமந்திரன் எம்.பியின் நிதி ஒதுக்கீட்டில்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரனின் கோரிக்கைக்கு அமைவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு இரு குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ப.திலீபனிடம் இந்தக் குளிர்சாதனப் பெட்டிகளைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ, வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க நிர்வாகசபை உறுப்பினரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் பா.மரியதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# யாழ். மாநகரசபை 'பட்ஜட்' தோற்றால் அரச நிர்வாகத்தின்கீழ் செல்லும் நிலை!

## அனந்தி சசிதரன் எச்சரிக்கை

தமிழ்த் தேசிய அரசியலைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். நகரை ஓர் அழகிய நகரமாக கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதும் வடக்கு மாகாண சபையால் அது முடியாது போனது என அவர் குறிப்பிட்டார்.


தற்போது யாழ்ப்பாணம் மாநகர சபையினால் நகரை அழகாகக் கொண்டு வருவதற்கான பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என அனந்தி சசிதரன் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் தனிப்பட்ட அல்லது அரசியல் கட்சி ரீதியான காழ்ப்புணர்ச்சி காரணமாக நல்ல விடயங்களை செய்வதற்கு தடையை ஏற்படுத்தக் கூடாது என அனந்தி சசிதரன் குறிப்பிட்டார்.

எனவே மீண்டும் ஒருமுறை வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டால் ஆட்சி அதிகாரம் அரசாங்கத்தின் பக்கம் சென்றுவிடும் என்றும் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

# அம்பாறையில் புத்தர்சிலை வைக்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார் கஜேந்திரன்





அம்பாறை, டிசெ. 15

அம்பாறை மாவட்டம் சங்கமன்கண்டி கோமாரி பகுதியில் பிக்குகளால் பொலிஸ் பாதுகாப்புடன் புத்தர் சிலை அமைக்கப்பட்டது தொடர்பாக அவ்விடத்திற்குச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், கோறளைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சேகர் மற்றும் அம்பாறை இணைப்பாளர் துசாந்தன் ஆகியோர் நிலைமைகளை பார்வையிட்டனர்.

அந்நிலையில் மக்களின் பலத்த எதிர்ப்புப் போராட்டத்தால் குறித்த புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கெரவலபிட்டிய ஒப்பந்தத்தில் சட்டமா அதிபரின் அனுமதி இல்லை

## மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டு

கெரவலபிட்டிய உடன்படிக்கைக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளபோதிலும், அந்த பரிந்துரைகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவில்லை என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி, இந்த ஒப்பந்தம் தொடர்பில் பல விடயங்களை முன்வைத்தார்.

இந்த நிறுவனம் முதலில் ஸ்ரீலங்கா ஹோல்டிங்ஸ் என குறிப்பிடப்பட்டதாக தெரிவித்த அவர், மத்திய வங்கியின் நாணயச் சபையின் கடிதத்தை பரிசீலிக்காமல் சட்ட மா அதிபர் எவ்வாறு ஒப்பந்தத்தை அங்கீகரித்தார் என்றும் கேள்வியெழுப்பினார்.

எவ்வாறாயினும், குறித்த உடன்படிக்கையில் சட்டமா அதிபரின் அனுமதியை நியாயப்படுத்தும் ஆவணங்கள் இல்லை என சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாததால், இலங்கையில் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்றும் இரண்டு ஆண்டுகளுக்கு பொதுமக்களுக்கு வெளிப்படுத்த முடியாத ஒரு சரத்து ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

# மின்சார வாகனக் கொள்வனவுக்கு மக்களை ஊக்குவிக்க கோரிக்கை

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் விடுப்பு

மின்சார வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு மக்களை ஊக்குவிக்குமாறு இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாகனங்களின் எதிர்காலம் மின்சாரத்தைக்கொண்டே அமைந்திருக்கும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பெற்றோல் வாகனங்களுக்குப் பதிலாக தரமான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தச் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெரும்பாலான வளர்ந்த நாடுகள் மின்சார வாகனங்களை வாங்குவதற்கான வசதிகளை அறிமுகப்படுத்துகின்றன எனவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில நாடுகள் மின்சார வாகனங்களை வாங்கும்போது சாலை வரி விலக்கு மற்றும் குறைந்த வட்டிக்கு குத்தகை வசதிகளுடன் குறிப்பிட்ட சலுகைகளை அனுமதிக்கின்றன என்றும் இது மக்களை மின்சார வாகனங்களைக் கொள்வனவு செய்ய ஊக்குவிக்கும் என்றும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

மின்சார வாகனங்களின் பயன்பாடு சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும் மற்றும் காற்று மாசுபாட்டை குறைக்கும் என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2021 இல் வெளியிடப்பெற்றது.